ஹளரத் ஸுஹைப் (ரலி)

அவர்களின் வரலாற்றுப் பின்னணி:

குர்ஆன் வசனம் 2:207-க்கான விளக்கம்

ஆக்கம் திருப்பூர்K. அமானுல்லாஹ்

செல் 98 94 19 77 95

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா முனவ்வராவில் இருக்கும் போது, ஸுஹைபுப்னு ஸனானிர்ரூமி (ரலியல்லாஹு தஆலா அன்ஹு) அவர்களும் இன்னும் சில முஸ்லிம்களும் மக்காவை விட்டு ஹிஜ்ரத் செய்து மதீனா புரியை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்போது ஹளரத் ஸுஹைப் (ரலி) அவர்களுக்கு வயது நூறு!

மக்காவிலுள்ள இணை வைப்பாளர்கள் (குறைஷியர்) இவர்களைப் பின்தொடர்ந்து சென்று வழிமறித்து, இவருடன் வந்தவர்களைக் கொன்றுவிட்டு, ஹளரத் ஸுஹைப் (ரலி) அவர்களை நோக்கி வந்தனர். அப்பொழுது அவர் தமது அம்பராக் கூட்டிலிருந்து அம்புகளை எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கி:

"குறைஷியரே! நான் அம்பெய்வதில் மிக வல்லவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் விடும் அம்பு தப்பவும் மாட்டாது. என்னிடம் இருக்கும் கடைசி அம்பு இருக்கும் வரை என்னை நீங்கள் பிடிக்க முடியாது. தவிரவும் அம்புகள் தீர்ந்தபின் என் வாள் ஆயுதத்தால் உங்களை வெட்டவும் செய்வேன். எனவே உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். மேலும், நான் வயோதிகனாக இருப்பதால் உங்களுக்கு என்னால் பிரயோஜனமுமில்லை. ஆனால், மக்காவிலுள்ள எனது இல்லத்தில் என் பொருள்கள் (செல்வங்கள்) இருக்கின்றன. ஆதலின், என்னையும் நான் இஸ்லாத்தைத் தழுவி இருக்கும் விஷயத்தையும் விட்டு விட்டு, நீங்கள் மக்காவிற்குச் சென்று அப்பொருள்களை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.

இதனைக் கேட்டதும் அவர்கள் அவரை மதீனாபுரிக்குச் செல்லவிட்டு விட்டு, மக்கமா நகரம் வந்து அப்பொருள்களை எடுத்துக் கொண்டனர். பின்னர், இவர் மதீனமா நகரம் வந்தபோது, ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலியல்லாஹு தஆலா அன்ஹு) அவர்கள் இவரைக் கண்டு, "ஸுஹைபே! வியாபாரம் லாபத்தை அளித்து விட்டது" என்று கூறினார்கள்.

இவ்வாறு கூறியதற்குக் காரணமென்ன வென்று ஹளரத் ஸுஹைப் (ரலி) அவர்கள் வினவியதற்கு, ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அவரைக் குறித்து இந்த (2:207) ஆயத்து அருளப்பட்டிருப்பதைக் கூறினார்கள். இதனால் அவர் மிக்க சந்தோஷமடைந்தார்.

மூமின்களுக்கும் வலிமார்களுக்கும் உள்ள வித்தியாசம் & ஆன்மீகப் பாடம்:

மூமின்கள் (விசுவாசிகள்) தங்கள் உயிர்களை விற்று, அதற்குக் கிரயமாகச் (விலையாக) சுவர்க்கத்தை வாங்கி இருக்கிறார்கள்.

வலிமார்கள் (இறைநேசர்கள்) தங்கள் விருப்பப்படியே தங்களது உயிர்களை விலைக்கு விற்று, அதன் கிரயத்திற்குப் பதிலாக அல்லாஹு தஆலாவினது "திருப்திகளை" விலைக்கு வாங்கி இருக்கிறார்கள். எனவே, இவ்விரண்டிற்கும் இடையில் அதிக வித்தியாசமிருக்கிறது.

ஆகவே, பரமாதத்திகத் துறையில் (ஆன்மீகப் பாதையில்) செல்பவரான ஸாலிக் (இறைவழிப் பயணி), மனிதத்துவம் என்ற தமது ஊரை விட்டு, பக்கத்தில் உள்ளவர்களது நகரங்களுக்குச் செல்ல வேண்டியது அவசியமாகும். அதாவது, தனது உலகப் பழக்க வழக்கங்கள், இச்சைகள் முதலியவற்றைத் துறந்து, சிருஷ்டிப் பொருள்களின் பால் (படைப்புகளின் மீது) உள்ள தமது சம்பந்தத்தை அறுத்துக் கொண்டு, சிருஷ்டிக்கர்த்தாவின் பால் (படைத்த இறைவன்பால்) செல்லல் வேண்டும். இப்படிச் செய்பவர்தான் உண்மையான முஜாஹிதாகவும், ஷஹீதாகவும் ஆவார்.

இதனைக் குறித்துத்தான் இந்த ஆயத்திலும், "அல்லாஹ்வின் திருப்திகளை நாடி தன் உயிரை விற்பவரும் மனிதரில் இருக்கின்றனர்" என்று இறைவன் கூறி இருக்கிறான்

.